செய்தி வெளியீடு எண்: 628 நாள்: 08.11.2011

**பத்திரிக்கைச் செய்தி**

இன்று (8.11.2011) மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் பொது விநியோகத் திட்ட செயல்பாடு குறித்து சென்னை சேப்பாக்கத்தில் உள்ள எழிலகம் கட்டிட கூட்ட அரங்கில் ஆய்வுக் கூட்டம் நடத்தினார்கள். ஆய்வுக் கூட்டத்தில் பொது விநியோக திட்ட செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், குடிமைப் பொருள் குற்றப்புலனாய்வுத் துறை மற்றும் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் ஆகியவற்றின் பணிகள் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார்கள். ஆய்வுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

திருவாளர்கள்

| | | |
|---|---|---|
| 1 | து.நா. இராமநாதன், இ.ஆ.ப | அரசுச் செயலாளர்<br>கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை 9 |
| 2 | கா. பாலச்சந்திரன், இ.ஆ.ப., | ஆணையாளர்,<br>உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை,<br>சேப்பாக்கம், சென்னை 5 |
| 3 | முனைவர் எம். வீரசண்முகமணி, இ.ஆ.ப., | நிர்வாக இயக்குநர்,<br>தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்,<br>சென்னை 10 |
| 5 | எம். கலைவாணன், இ.ஆ.ப | நிர்வாக இயக்குநர்<br>தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம்,<br>சென்னை |
| 6 | கே. இராதாகிருஷணன்,இ.கா.ப., | காவல் துறை கூடுதல் இயக்குநர்,<br>குடிமைப் பொருள் குற்றப்புலனாய்வுத் துறை,<br>சென்னை 35 |
| 7 | கரண்சின்கா, இ.கா.ப | காவல் துறைத் தலைவர்,<br>தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம்,<br>சென்னை |
| 8 | கபில்குமார் சரத்கர், இ.கா.ப | காவல் கண்காணிப்பாளர்,<br>குடிமைப் பொருள் குற்றப்புலனாய்வுத் துறை, மதுரை |
| 9 | சோ. விஸ்வநாதன் | இணை ஆணையாளர்,<br>உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை,<br>சென்னை 5 |

பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாடு மற்றும் சேவைகளை மேம்படுத்த அலுவலர்களுக்கு கீழ்க்கண்ட அறிவுரைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஏழை எளிய மக்களின் மீது கொண்டுள்ள அளவற்ற அன்பின் காரணமாக பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசியினை **1.6.2011** முதல் விலையின்றி வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். இந்திய துணைக் கண்டத்திலேயே தமிழ் நாட்டில் தான் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி விருப்ப குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையின்றி வழங்கப்படுகிறது. இதன் மூலம் இம்மாநிலத்தில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் உணவு பாதுகாப்பு வழங்கப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. இத்திட்ட பலன்கள் ஏழை எளிய மக்களை முழுமையாக சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும்.

கிடங்குகளில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதற்கு தேவையான அளவு அத்தியாவசியப் பொருள்கள் இருப்பு வைக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். கிடங்குகளில் இருப்பு வைக்கப்படும் அத்தியாவசியப் பொருள்கள் நல்ல தரத்துடன் இருப்பதை அவ்வப்போது ஆய்வு செய்து உறுதி செய்து கொள்ள வேண்டும் . கிடங்கிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கு அட்டவணைப்படி உரிய தேதியில் அத்தியாவசியப் பொருள்கள் நகர்வு செய்யப்பட வேண்டும்.

அத்தியாவசியப் பொருள்கள் கிடங்கிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கு அனுப்புகின்ற போது அத்தியாவசியப் பொருள்கள் உள்ள மூட்டைகளை சமச்சீர் செய்து கூட்டுறவுத் துறை அலுவலர்கள் மூலம் அனுப்ப வேண்டும். ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு வண்ண நூலினால் அரிசி மூட்டைகள் தைத்து அனுப்ப வேண்டும்.

நியாயவிலைக் கடைகள் பணி நாட்களில் உரிய நேரத்தில் திறக்கப்பட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்பட வேண்டும். நியாயவிலைக் கடைகளில் எல்லா அத்தியாவசியப் பொருள்களும் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட வேண்டும். இருப்பு விவரத்தினை தகவல் பலகையில் விளம்பரப்படுத்தப்பட வேண்டும்.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் தரமான பொருள்கள் சரியான எடையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். தரமற்ற பொருள்கள் ஏதுமிருப்பின் அவை கிடங்குகளுக்கு உடன் திருப்பி அனுப்பப்பட்டு தரமான பொருள்கள் நியாயவிலை அங்காடிகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்குவதற்கான அத்தியாவசியப் பொருள்களுக்கான ஒதுக்கீடு ஆணையை உரிய தேதியில் பிறப்பிக்க வேண்டும்.

மாத துவக்கத்திலிருந்தே நியாயவிலைக் கடைகளில் அனைத்து அத்தியாவசியப் பொருள்களும் இருப்பு வைக்கப்பட்டு நியாயவிலைக் கடைகளுக்கு வரும் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருள்கள் வழங்கப்பட வேண்டும்.

சிறப்பு பொது விநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருள்களான துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு , கோதுமை மாவு மற்றும் பாமாயில் ஆகியவை அனைத்து நியாயவிலை அங்காடிகளுக்கும் போதுமான அளவு நகர்வு செய்யப்பட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

அலுவலர்கள் மற்றும் நியாயவிலைக் கடை பணியாளர்கள் பொது மக்களிடம் கனிவுடன் நடந்து கொள்ள வேண்டும். பொது மக்கள் கேட்கும் விபரங்களுக்கு பொறுப்புடனும், கனிவுடனும் உரிய தகவல்கள் அளிக்க வேண்டும்.

மண்ணெண்ணெய் பெற மாத இறுதியில் நியாயவிலைக் கடைகளுக்கு வரும் குடும்ப அட்டைதாரர்களுக்கு , நியாயவிலைக் கடையில் மண்ணெண்ணெய் இல்லை எனில் , அவர்களுக்கு டோக்கன் வழங்கி அடுத்த மாதம் முன்னுரிமை அடிப்படையில் அவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கிட வேண்டும்.

பொது விநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருள்களை கடத்துவோர் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கடத்தப்படும் அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் அவை கடத்தப்படும் வாகனங்கள் கைப்பற்றுதல் செய்யப்பட வேண்டும் . தொடர் பதுக்கல் , கடத்தலில் ஈடுபடுவோர் கள்ளச்சந்தை தடுப்பு சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட வேண்டும்.

அத்தியாவசியப் பொருள்கள் கைப்பற்றப்படும் இனங்களில் விசாரணையை விரைவாக செய்து முடித்து கைப்பற்றப்படும் அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் வாகனங்களை தீர்வு செய்ய வேண்டும் .

மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்படக் கூடிய பகுதிகளில் அமைந்துள்ள கிடங்குகள் மற்றும் நியாயவிலைக் கடைகளில் இரண்டு மாதங்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருள்கள் முன் கூட்டியே இருப்பு வைக்கப்பட்டு அட்டைதாரர்களுக்கு தடையின்றி வழங்கப்பட வேண்டும்.

நுகர்வோர் விழிப்புணர்வு குறித்த செயல்பாடுகளை தீவிரப்படுத்த வேண்டும். குடிமக்கள் நுகர்வோர் மன்றங்களை பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் ஏற்படுத்த வேண்டும்.

பொது விநியோகத் திட்ட மேம்பாட்டிற்காக உணவுப் பொருள் வழங்கு துறை அலுவலர்களுக்கு சிம்கார்டு வழங்கப்பட்டது.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**